**In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.**

O.S.No. 1/2024 தேதி- 11.03.2026
(PW.1) – ஜெயகிருஷ்ணன்

**4 மற்றும் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-**

1. வழக்கு பட்டிகையில் சொல்லப்பட்டுள்ள A மற்றும் B பட்டிகை சொத்துக்கள் பொன்மனை கிராமத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். தற்போது மேற்சொன்ன சொத்துக்கள் பொன்மனை கிராமத்தில் இருந்து பிரிக்கப்பட்டு சுருளகோடு கிராமத்திற்கு உட்பட்டது என்றால் சரிதான். வழக்கு B பட்டிகை சொத்து 8 ஏக்கர் பரப்பளவு கொண்ட சொத்து என்றால் சரிதான். வழக்கு B பட்டிகை சொத்து அரசுக்கு சொந்தமாக பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி என்றால் இல்லை.

2. வழக்கு B பட்டிகை சொத்து அரசின் புறம்போக்கு நிலம் என்று தான் என்னுடைய பிராதிலும், முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, முன்பு அது எங்கள் கைவசம் தான் இருந்தது, தற்போது அது அரசு நிலமாக்கப்பட்டது. என் நிரூபண வாக்குமூலம் மற்றும் வழக்கின் பிராதில் உள்ள சங்கதிகள் அனைத்து வழக்கறிஞருக்கு நான் தான் சொல்லிக் கொடுத்தேன் என்றால் சரிதான்.

3. கல்குளம் தாலுகாவில் வழக்கு B பட்டிகை சொத்து உட்பட சுமார் 85 சதுர மைல் பரப்பளவில் 1903 ல் வீரபுலி பாதுகாக்கப்பட்ட வனப்பகுதி என அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதி என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு A பட்டிகை சொத்தான எனது தகப்பனார் சிவசங்கரன் நாயர் என்பவர் சுப்பிரமணியபிள்ளை என்பவரிடமிருந்து கிரயம் வாங்கிய 21 ஏக்கர் பரப்பளவு கொண்ட நிலம் என்றால் சரிதான். வழக்கு A பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் தான் வழக்கு B பட்டிகை சொத்து உள்ளது என்றால் சரிதான்.

4. முதல் விசாரணையில் சொல்லியுள்ள வழக்கு B பட்டிகை சொத்தின் முன்ஜென்மி சுப்பிரமணிய பிள்ளையோ, சிவசங்கரன் நாயரோ பல ஆண்டுகளுக்கு முன்பாக கிராம்பு, நல்லமிளகு, கமுகு போன்ற பல மரங்களை நட்டு வளர்த்து வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அது சம்மந்தமான எந்த ஆவணங்களை தாக்கல்

செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்சொன்னவாறு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

5. முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லியுள்ள வழக்கு B பட்டிகை சொத்தில் சுப்பிரமணிய பிள்ளை மரங்களை நட்டு வைத்திருந்தார் என்றும், அந்த மரங்களுக்கும், விருட்சங்களுக்கும் சேர்த்து கிரய தொகை செலுத்தி கிரயம் பெற்றதாக எங்களுடைய கிரய ஆவணத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணையின் தொடர்ச்சிகாக வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).